# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏவுக்கு சிறப்பான வரவேற்பு



கிருஷ்ணகிரி,அக்.01-

கிருஷ்ணகிரி திமுக நகர செயலாளர் நவாப் தலைமையில் கிழக்கு மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாக கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையான ஒப்பத்தவாடி அருகே கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள், தொண்டர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மதியழகன் எம் எல் ஏ அவர்களுக்கு சால்வை, மாலை அணிவித்து, பூ கொத்துக் கொடுத்து, தாரை தப்பட்டை முழுங்க வரவேற்பளித்தனர்.

இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி நகர திமுக சார்பாக கிருஷ்ணகிரி ரவுண்டானாவில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், நகர்மன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், கிருஷ்ணகிரி நகர் மன்ற தலைவர் பரிதாநவாப், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், சாமிநாதன், நாகராசன், கோதண்டன், அஸ்லம் ரஹ்மான் ஷெரிப், சித்ரா சந்திரசேகர் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஊத்தங்கரை வடக்கு மூன்றாம்பட்டி குமரேசன், ஊத்தங்கரை தெற்கு ரஜினிசெல்வம், ஊத்தங்கரை மத்திய எக்கூர் செல்வம், மத்தூர் வடக்கு வசந்தரசு, மத்தூர் தெற்கு முன்னாள் எம்எல்ஏ, நரசிம்மன், கிருஷ்ணகிரி கிழக்கு கோவிந்தன், கிருஷ்ணகிரி மேற்கு தனசேகரன், பர்கூர் வடக்கு முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ராஜேந்திரன், பர்கூர் தெற்கு அறிஞர், போச்சம்பள்ளி சாந்தமூர்த்தி, காவேரிப்பட்டணம் கிழக்கு மகேந்திரன், காவேரிப்பட்டணம் மேற்கு தேங்காய்சுப்பிரமணி, பேரூர் கழக செயலாளர்கள் நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, காவேரிப்பட்டணம் பாபு, பர்கூர் வெங்கட்டப்பன், ஊத்தங்கரை நகர செயலாளர் பாபு சிவக்குமார்,நகர அவை தலைவர் தணிகைகுமரன், காவேரிப்பட்டிணம் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா,கழக பிரதிநிதிகள் பாபா மாதையன்,விஜயகுமார்,கோவிந்தராஜ் வழக்கறிஞர்,சலீம்பாஷா உட்பட மாவட்ட சார்பு அமைப்பு நிர்வாகிகள், திமுக பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# பள்ளிபாளையம் அருகே மறுசீரமைப்பு செய்த அரசு பள்ளி கட்டிடம்: முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி திறந்து வைத்தார்



நாமக்கல்,அக்.01-

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிபாளையம் அருகே மாம்பழையம் அரசு தொடக்க பள்ளியில் தனியார் தொண்டு நிறுவனத்தின் சார்பில் 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 வகுப்பறை கட்டிடம் மறு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வந்தது. இதையடுத்து சீரமைப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில் மாணவர்கள் பயன்பாட்டிற்காக கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்ட கழக செயலாளரும், குமாரபாளையம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி திறந்து வைத்தார். தொடர்ந்து பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கான பாதுகாப்பு சூழல் மற்றும் சுகாதாரமான குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பாக பள்ளி வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டார். மேலும் பள்ளியின் சுற்றுச்சுவர் மற்றும் புதிதாக கட்டப்பட்டு வரும் வகுப்பறை கட்டிடத்தை விரைந்து முடிக்குமாறு ஒப்பந்தாரரிடம் அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் எஸ்.செந்தில், ஆசிரியர்கள், தன்னார்வ அமைப்பினர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயலாளராக 2 வது முறை ஒசூர் எம்எல்ஏ பிரகாஷ் தேர்வானநிலையில் , பேளகொண்டப்பள்ளியில் ஒசூர் ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி தலைமையிலான நிர்வாகிகள், மாவட்ட கவுன்சிலர் முனிராஜ், மாசநாயக்கன்பள்ளி கவுன்சிலர் சம்பத்குமார், அச்செட்டிபள்ளி கவுன்சிலர் வெங்கடசாமி, நல்லூர் கவுன்சிலர் கோபால், சூரி உள்ளிட்டோர் சால்வை,பூமாலை அணிவித்து வாழ்த்துக்கூறினர்.

# நாமக்கல் மாவட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள் 3-வது நாளாக போராட்டம்

ராசிபுரம்,அக்.01-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் அருகே உள்ள நாரைக்கிணறு ஊராட்சிக்குட்பட்ட பெரியக்கிணறு பகுதியில் கடந்த 23-ந் தேதி தண்ணீர் தொட்டி இடிந்து விழுந்ததில், இடிபாடுகளுக்குள் சிக்கி மூதாட்டி பாப்பாத்தி (வயது 55) என்பவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இது தொடர்பாக ஊராட்சி செயலாளர் கருணாகரன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் நாரைக்கிணறு ஊராட்சியின் கிராம நிர்வாக அலுவலர் தங்கராஜிக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட கட்டுமான பணிகளை தடுத்து நிறுத்தவில்லை, இது குறித்து விளக்கம் கேட்டு 17-பி மெமோ நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மஞ்சுளாவால் வழங்கப்பட்டது. ஆனால் அதை கிராம நிர்வாக அலுவலர் தங்கராஜ் பெறவில்லை. இந்த நிலையில் கிராம நிர்வாக அலுவலருக்கு 17-பி குற்றப்பாணையை வழங்கப்பட்டதை கண்டித்தும், அதை திரும்பப் பெறக் கோரியும் நாமக்கல் மாவட்டத்தில் பணியாற்றும் 300க்கும் மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் தற்செயல் விடுப்பு எடுத்து பணியை புறக்கணித்து நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தின் உள்ளே அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். 3-வது நாளாக கிராம நிர்வாக அலுவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் சிட்டா, அடங்கல், பிறப்பு, இறப்பு, வாரிசு சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வருவாய் துறை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் கல்வி உதவித்தொகை பெற வருமானச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்துள்ள மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# காச நோய் ஒழிப்பு குறித்த கருத்தரங்கம்




செங்குன்றம்,அக்.1-

செங்குன்றத்தை அடுத்த பாடியநல்லூர் சுங்கசாவடி அருகே உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவமனை சார்பாக அரசு மருத்துவர்களும் தனியார் மருத்துவமனை மருத்துவர்களும் இணைந்து காச நோய் ஒழிப்பு குறித்த கருத்துரங்கம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மாவட்ட காச நோய் பிரிவு இணை இயக்குனர் லட்சுமி முரளி, மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆனந்த் ,மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் முனியப்பன் ,இந்திய மருத்துவ சங்க தலைவர் டாக்டர் செல்வம், டாக்டர்கள் முத்துக்குமரவேல் பிருந்தா, விக்னேஷ், அபிநயா, சந்திரசேகர் ,அருண்குமார், உள்ளிட்டோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர் காச நோய் ஒழிப்பு குறித்த ஆலோசனைகளும் நடைமுறைகளும் விவாதிக்கப்பட்டன விழாவில் காசநோய் ஒழிப்பு பணியில் ஈடுபட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

# தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தடங்கம் சுப்பிரமணிக்கு உற்சாக வரவேற்பு



தர்மபுரி,அக்.01-

தர்மபுரி நகர எல்லையில் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தடங்கம் சுப்பிரமணிக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளராக முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம் சுப்பிரமணி 3-வது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் முதல்-அமைச்சர் மு. க. ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். புதிதாக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக அவர் நேற்று தர்மபுரி வந்தார். அவருக்கு தர்மபுரி நகர எல்லையான பழைய தர்மபுரி அடுத்துள்ள பச்சமுத்து கல்லூரி அருகில் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேளதாளங்கள் முழங்க வானவேடிக்கையுடன் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் சி. செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் பி. உமாசங்கர், ஆர்.ஆறுமுகம், எம்.ரேணுகாதேவி, மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, தலைமை செயற்குழு உறுப்பினரும், வர்த்தகரணி மாநில துணை அமைப்பாளருமான பி.தர்மசெல்வன், முன்னாள் எம்.பி.யுமான எம்.ஜி. சேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் சோ.மணி, எம். வேலுமணி, வி. நடராஜன், து.சரஸ்வதி துரைசாமி, பேரூராட்சி செயலாளர்கள் சண்முகம், மு. வீரமணி, பென்னாகரம் ஒன்றிய நிர்வாகிகள் ராஜி, நிலா மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளில் முன்னாள் நகர செயலாளர் அன்பழகன், நகராட்சி துணைத் தலைவர் நித்யா அன்பழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கௌதம, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் பொன்மகேஸ்வரன், சப்தகிரி கல்வி நிறுவனங்களில் நிர்வாக இயக்குனர் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், நகர அவைத் தலைவர் அழகுவேல், நகர துணை செயலாளர்கள் முல்லைவேந்தன், அன்பழகன், கோமளவல்லி ரவி, நகர பொருளாளர் சம்மந்தம், மாவட்ட பிரதிநிதிகள் கனகராஜ், சுருளிராஜன், நகராட்சி கவுன்சிலர்கள் பாண்டியன், முருகவேல், வாசுதேவன், ஜெகன், மாதேஷ், ராஜா, மோகன், சௌந்தரராஜன் மற்றும் ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி தலைமையில் நடைபெற்றது



கிருஷ்ணகிரி,அக்.01-

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி தலைமையில் (30.09.2022) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஏரிகள் ஆக்கிரமிப்பு அகற்றுதல், இயற்கை விவசாயம், குடிநீர், பட்டா மாறுதல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரி மற்றும் நீர்வரத்து கால்வாய்கள் தூர்வாரும் பணிகள், சொட்டுநீர் பாசனம், பூச்சிகள் கட்டுப்படுத்துதல், வேளாண் கடன் உதவிகள், பத்திரப்பதிவு, வனத்துறை சார்பாக வனவிலங்குகளை கட்டுப்படுத்துதல், சாலை வசதிகள், வேளாண் விரிவாக்க மையம் கட்டிடம் சீரமைக்கும் பணிகள் என கடந்த 26.08.2022 அன்று நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 213 மனுக்களில் தகுதியான 196 மனுக்களுக்கு துறை சார்ந்த அலுவலர்கள் பதிலளித்தனர். 10 மனுக்கள் நிலுவையில் உள்ளது. 7 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 160 மனுக்கள் விவசாயிகள் வழங்கினார்கள். கலெக்டர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி தெரிவித்ததாவது: கி ருஷ் ண கிரி மாவட்டத்தில் நடைபெறும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏற்கனவே பெறப்பட்ட மனுக்கள் மீது அலுவலர்கள் உரிய பதில் அளித்துள்ளனர். (30.09.2022) விவசாயிகளிடமிருந்து 160 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், நிறைவேற்ற முடியாத மனுக்களுக்கு உரிய காரணங்களுடன் மனுதாரர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். சூளகிரி சந்தையில் அடிப்படை வசதி, பாதாள சாக்கடை சரிசெய்யவும், பத்தளப்பள்ளி சந்தையில் இட வசதி வேண்டியும், தளி ராசிக்கல் பகுதியில் பாலம் அமைக்கவும், பழுதடைந்த நிழற்கூடம் சரிசெய்து தரவும், வேகத்தடை அமைக்கவும், நீர் நிலை ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றவும், சிங்காரப்பேட்டை பகுதிகளிலுள்ள நடைபாதையில் கடைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மையானத்திற்கு செல்ல வழித்தடம் அமைக்கவும், கால்வாய் உடைப்புகளை 100 நாள் திட்ட பணியாளர்களை கொண்டு சரிசெய்யவும், பால் உற்பத்தியில் விலை உயர்வு குறைக்கவும், சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற கோரிக்கை வைத்தனர்.

மேலும், யர் மின்னழுத்தம் செல்லும் பாதையில் எச்சரிக்கை பலகை அமைக்கவும், பள்ளி சுற்றுச்சுவர்களை சரிசெய்யவும், இயற்கை விவசாயத்திற்கு நிதி ஒதுக்கவும், விவசாயத்திற்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடுகளை சீர் செய்யவும், மார்க்கண்டேயன் நதியின் குறுக்கே தடுப்பணை பணிகளை விரைந்து முடிக்கவும், படேதளவாய் ஏரியில் கால்வாய்களை ஆழப்படுத்தவும், வேப்பனஹள்ளியில் பழுதடைந்துள்ள வேளாண் விரிவாக்க மைய கட்டிடத்தை சீரமைக்கவும், குருபரப்பள்ளி ஊராட்சி, புலியஞ்சேரியில் ஆவின் பாலக கட்டிடம் திறக்கவும், குருபரப்பள்ளி முதல் நல்லூர் செல்லும் வழியில் பள்ளி மாணவர்களுக்கு கூடுதல் பேருந்து வசதி செய்து தரவும், மஞ்சள் குவிண்டாள் விலையை அதிகப்படுத்தவும், வட்டாட்சியர் அலுவலகங்களில் இருவரும் ஒருவர் என்ற சான்றிதழ் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைகள் வைத்துள்ளார்கள். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் விளக்கமளித்துள்ளனர். துறை சார்ந்த அலுவலர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் செ.ராஜேஸ்வரி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொ) சண்முகம், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் கோ.பூபதி, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.எல்.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் முத்துசாமி, இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் மகேந்திரன், எலுமிச்சங்கிரி வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி டாக்டர்.சுந்தராஜ், வேளாண் அலுவலர் அருள்தாஸ் உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



விருகம்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட 136வது வார்டில் வடகிழக்கு பருவ மழையின் முன்னச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாமன்ற உறுப்பினர் து.நிலவரசி மாநகராட்சி அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். உடன் திமுக பொது குழு உறுப்பினர் உ.துரைராஜ் வட்ட செயலாளர் பூக்கடை ஆர்.பழனிசாமி உள்ளனர்.

# நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஸ்ரேயா பி.சிங் தலைமையில் நடைபெற்றது

நாமக்கல்,அக்.01-

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஸ்ரேயா பி. சிங்., தலைமையில் (30.09.2022) நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் உட்பட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலெக்டர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது, நாமக்கல் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 716.54 மி.மீ. தற்போது வரை 656.90 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது. செப்டம்பர் 2022 ஆம் மாதம் முடிய இயல்பு மழையளவை விட 240.02 மி.மீ. அதிகமாக மழை அளவு பெறப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை நெல் 764 எக்டர், சிறுதானியங்கள் 31,423 எக்டர், பயறு வகைகள் 5,364 எக்டர், எண்ணெய் வித்துக்கள் 27,274 எக்டர், பருத்தி 2,341 எக்டர் மற்றும் கரும்பு 5,731 எக்டர் என மொத்தம் 72,897 எக்டரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களில் தக்காளி 337 எக்டர், கத்திரி 317 எக்டர், வெண்டை 216 எக்டர், மிளகாய் 139 எக்டர், மரவள்ளி 1,483 எக்டர், வெங்காயம் 1,568 எக்டர், மஞ்சள் 1,635 எக்டர் மற்றும் வாழை 1,981 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விதைகள் மற்றும் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் யூரியா 1421 மெ.டன், டிஏபி 1288 மெ.டன், முரேட் ஆப் பொட்டாஷ்1003 மெ.டன், சூப்பர் பாஸ்பேட் 421 மெ.டன், காம்ப்ளக்ஸ்3399 மெ.டன் என்ற அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் பிற வளர்ச்சித் திட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) து.இராஜகோபால், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் த.செல்வகுமரன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் ப.கௌசல்யா, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (பொ) எஸ்.பாஸ்கர், தோட்டக்கலைத் துணை இயக்குநர் கி.கணேசன், நாமக்கல் மின்பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் கு.சிவக்குமார், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் முருகேசன், வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் நாசர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கா.முருகன் மற்றும் இதர துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், 150-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கொலை வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை

சென்னை அக் 1-

கொலை வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை வழங்கி பூந்தமல்லி கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் பாண்டியன் (வயது 24). இவர், 2015-ம் ஆண்டு போரூரில் மவுண்ட்-பூந்தமல்லி சாலையில் உள்ள மதுக்கடையில் மதுபானம் வாங்க சென்றார். அப்போது அங்கு தனது நண்பருடன் நின்று கொண்டிருந்த உதயகுமார் என்ற கத்தி உதயகுமார் (33) என்பவர் பாண்டியனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதில் ஆத்திரமடைந்த உதயகுமார் அருகில் இருந்த கட்டையால் தாக்கியதில் பாண்டியன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து வளசரவாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து உதயகுமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கு பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் 2-ல் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி முருகேசன் நேற்று தீர்ப்பு வழங்கினார். இதில் உதயகுமார் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஆயுள் தண்டனையும், ரூ.1,000 அபராதமும் விதித்து உத்தரவிட்டார். அபராதம் கட்டத்தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை அனுபவிக்கவும் நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

சீட்டு நிதி நடுவர் மன்றம், நாமக்கல்
நாமக்கல் சீட்டு நிதி நடுவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : மு.முத்துக்குமார் அவர்கள்
சீட்டு நடுவர் (கூ.பொ) மற்றும் சார்பதிவாளர் (நிர்வாகம்), நாமக்கல்.

**A.O.P.No. 54/2021**

**D.N.C.**சிட்ஸ் (பி) லிமிடெட்
அதன் போர்மேன், நாமக்கல்.
...வாதி

/ எதிராக /

**1. S.Arunkumar,**
**S/o.Subramanian,**
No.37/1-18,
Madha Kovil Street,
Ganesapuram,
Namakkal - 637 001.
**2. A.Kalaiselvi,**
**D/o. Subramanian,**
No.37/1-18,
Madha Kovil Street,
Ganesapuram,
Namakkal - 637 001.
...பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி நெம்பரில் மனுதாரர் நிறுவனத்திடம் சீட்டு குரூப் எண். **NKL/50K/10** சீட்டில், எதிர்மனுதாரர் **2** வது சீட்டு புள்ளியாக சேர்ந்து ஏலம் கோரி, தொகை பெற்று கொண்டு புரோநோட் எழுதிக் கொடுத்து உள்ளார் என்றும் பின்னிட்டு தொகை செலுத்தாததால், மனுதாரர் நிறுவனம் உங்கள் பேரில் மனு செய்து, மேற்படி மனு வருகின்ற **11.10.2022** தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் மேற்படி தேதியன்று நாமக்கல், நல்லிபாளையம், திருச்செங்கோடு ரோடு, மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மதியம் **3.00** மணிக்கு ஆஜராகி, தங்கள் ஆட்சேபனைகளை தெரிவித்து கொள்ளலாம் என்றும் தவறினால் மேற்படி மனுவில் துணை சீட்டுப் பதிவாளர் அவர்களால் தக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

சீட்டு நடுவர் (கூ.பொ) மற்றும்
சார்பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவகம்,
நாமக்கல்.

மாண்பமை சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1 சேலம்.

**M.C.O.P.No. 1124/2021**

மாதேஸ்வரி, க/பெ. தங்கவேல்,
க.எண். 3/17, வடுவன்காடு,
எஸ்.நாட்டாமங்கலம்,
அமானி கொண்டலாம்பட்டி, சேலம்.
...மனுதாரர்

/ Vs /

V.சியாம் சுந்தர், த/பெ. விஜயராகவன்,
க.எண்.30, செங்கழுப்பனார் தெரு,
செந்தாரப்பட்டி, கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்.
...எதிர்மனுதாரர் எண்.3

3-ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி மனுதாரர் மேற்படி மனுவினை சாலைவிபத்தினால் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வேண்டி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் தாங்கள் 3 ம் எதிர்மனுதாரராக சேர்க்கபட்டுள்ளீர்கள். மேற்படி மனுவின் பேரில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் வருகின்ற **27.10.2022** -ந் தேதி காலை 10.00 மணிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி உமது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறும்பட்சத்தில் வழக்கு மனு உமக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மாணிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

L.ராஜா,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

**அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுக்கா, மூலக்குறிச்சி, க.எண்.3/96 -ல் முகவரியில் வசித்து வரும் திரு.சிவமலை அவர்களின் மகள் தீபா க/பெ. சந்திரசேகர் ஆதார் எண். **4599 8897 8421** சுமார் **36** வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் நாமக்கல் மாவட்டம், தம்மம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் **25.03.2010**-ல் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான கிரய ஆவண எண். **622/2010** பதிவு பெற்றது. நான் கடந்த **30.08.2019** ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணியளவில் பையில் வைத்து எடுத்துக்கொண்டு முள்ளுக்குறிச்சி ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்க பார்த்தபோது அசல் ஆவணங்கள் இருந்தபையை காணவில்லை. யாரேனும் அதனை கண்டுப்பிடித்தால் எனது **9626136479** என்ற கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.மனு ரசீது எண்.63/2022.

இப்படிக்கு: தீபா, க/பெ. சந்திரசேகர், த/பெ. சிவமலை
க.எண்.3/96, மூலக்குறிச்சி, ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

# ஈரோடு மாவட்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை

## கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி துவக்கி வைத்தார்



**ஈரோடு,அக்.01-**

ஈரோடு மாவட்டம், காந்திஜி சாலையில் உள்ள வசந்தம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி தீபாவளி 2022 சிறப்புத் தள்ளுபடி விற்பனையினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் கடந்த 85 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழக நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து இந்தியா முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக சந்தைப்படுத்தி நெசவாளர்களுக்கு பேருதவி புரிந்து வருகிறது. கோ-ஆப்டெக்;ஸ் நிறுவனம் பட்டு இரக உற்பத்தியில் பாரம்பரியமாக ஈடுபட்டு வருகிறது. காஞ்சிபுரம், சேலம், கோவை, ஆரணி, தஞ்சை போன்ற பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச்சேலைகள் வாடிக்கையாளர்களின் பெரும் வரவேற்பை பெற்றுத் திகழ்கின்றன. வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையில் காலத்திற்கேற்ற புதிய வடிவமைப்பான மென்பட்டு சேலைகளையும் கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி வருகின்றது.

தீபாவளி 2022 சிறப்பு விற்பனைக்காக கைத்தறி இரகங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அனைத்;து விற்பனை நிலையங்களிலும் 15.09.2022 முதல் 30 சதவீதம் அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தீபாவளி 2022 சிறப்பு விற்பனைக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட புதிய வடிவமைப்புகளுடன் கூடிய பட்டு, பருத்தி சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டு இரகங்கள், ஆடவர் அணியும் ஆயத்த சட்டைகள், மகளிர் விரும்பும் சுடிதார் இரகங்கள்; ஆர்கானிக் பருத்தி சேலைகள், மற்றும் ஏற்றுமதி தரம் வாய்ந்த ஷோம் பர்னிசிங் இரகங்கள் ஏராளமாக தருவிக்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கடந்த 2021 தீபாவளி விற்பனையில் ஈரோடு கோ-ஆப்டெக்ஸ் வசந்தத்தில் ரூ.85.14 இலட்சமும், கோபிசெட்டிபாளையம் விற்பனை நிலையத்தில் ரூ.28.37 இலட்சமும் என மொத்தம் ரூ.113.51 இலட்சத்திற்கு ரகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நடப்பாண்டிற்கு ஈரோடு கோ-ஆப்டெக்ஸ் வசந்தத்தில் ரூ.235.00 இலட்சமும், கோபிசெட்டிபாளையம் விற்பனை நிலையத்தில் ரூ.85.00 இலட்சமும் என மொத்தம் ரூ.320 இலட்சத்திற்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் சிறப்பு தள்ளுபடி விற்பனையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஆடைகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்பட உதவிட வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில் கோ-ஆப்டெக்ஸ் தலைவர் ஏ.வி.வெங்கடாஜலம், நிர்வாக குழு இயக்குநர் எஸ்.பி.ரமேஷ், முதுநிலை மண்டல மேலாளர்; வெற்றிவேல், முதுநிலை மேலாளர் அன்பழகன் (வடிவமைப்பு), மேலாளர் கஜேந்திரன் (அரசுத்திட்டம்), ஈரோடு வசந்தம் விற்பனை நிலைய மேலாளர் கோ.விஸ்வநாதன் உட்பட கோ-ஆப்டெக்ஸ் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊட்டி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அமைச்சர்கள் எ.வ.வேலு, கா.ராமச்சந்திரன் ஆய்வு



ஊட்டி, அக்.01-

நீலகிரி மாவட்டம்; ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டட பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வனத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார். இவ் ஆய்வில் பொதுப்பணித்துறை அரசு முதன்மை செயலாளர் மரு.மணிவாசன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் பயிலும் மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவிகளை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அதற்கான தீர்வு காண்பதற்காக தான் இன்றைய தினம் இந்த கலைந்துரையாடல் கூட்டம் நடத்தப்படுகிறது. இக்கல்லூரியில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களும் வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. எந்த இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக வந்துள்ளீர்களோ அதை அடைந்தே தீர வேண்டும் என்ற நம்பிக்கையுடன் கல்வி கற்க வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, இன்றைய தினம் இந்த கலந்துரையாடல் கூட்டத்தினை நடத்தி கொண்டு இருக்கிறேன். கடந்த முறை இக்கல்லூரியில் ஆய்வு மேற்கொண்ட பொழுது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் விரைந்து பணிகள் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தினேன்.இன்றைய தினம் இக்கல்லூரியில் ஆய்வு மேற்கொண்ட தன் பேரில், காலநிலை மாற்றங்களினால் இக்கல்லூரிக்கு செல்லும் பாதையானது சீரமைக்கப்படாத சூழ்நிலையில் உள்ளது. மாணவ, மாணவிகள் நகர பகுதியில் உள்ள நூலகத்திற்கு செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. எனவே விடுதியிலிருந்து நூலகத்திற்கு செல்ல ஒரு பாதையினை அமைத்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். இதற்கான நடவடிக்கை மேற் கொள் ளப் ப டும். மேலும் தேர்வு சமயம் நெருங்கி விட்ட காரணத்தினால் அனைவரும் கவனமாக படிக்க வேண்டும். உங்கள் படிப்பிற்கு குந்தகம் ஏற்படாத வகையில் மருத்துவர் ஆகுவதற்கு தமிழக அரசு மற்றும் மருத்துவத்துறை, எனது துறை உறுதுணையாக இருக்கும். உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

பின்னர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்;; செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு இருந்ததன் காரணத்தினால் தான் சென்ற டிசம்பர் மாதம் பைலட் புரோகிராம் என்ற ஒரு திட்டத்தின் மூலம் மண் ஆணி பொருத்தி மண்சரிவினை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாநில நெடுஞ்சாலை மூலம் செய்த இப்பணியினை தேசிய நெடுஞ்சாலைக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மண் ஆணி பொருத்தப்பட்ட பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படவில்லை. இது முதலமைச்சர் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் கோட்ட பொறியாளர் இதுபோன்று 53 இடங்களில் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார்கள். இதனை மாவட்ட கலெக்டரின் பரிந்துரையோடு, முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று மண் ஆணி பொருத்தும் பணியினை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.சென்ற மழையின் போது நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தேசிய நெடுஞ்சாலையில் விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசல் நீடிக்கப்படுமா, போக்குவரத்திற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்பதனை நானும் வனத்துறை அமைச்சர் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டோம். தற்காலிகமாக இப்பகுதியில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. புவியியலார்கள் இப்பகுதியினை பயன்படுத்த முடியாது என கூறும் பட்சத்தில், வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் வனத்துறையினரிடம் ஒப்புதல் பெற்று சுமார் 12 மீட்டருக்கு சாலையினை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் உதகை மருத்துவ கல்லூரியில் சுமார் 150 மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட்டு இக்கல்லூரி சிறப்பாக நடைபெற்று கொண்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக மருத்துவ கல்லூரிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு சாலைகளை செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியதற்கிணங்க இன்றைய தினம் இக்கல்லூரியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கல்லூரி மாணவ, மாணவிகள் தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர். அவர்களது கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வர்கள், உதகை காக்காதோப்பு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் துணை கட்டடத்தினையும், உதகை சேரிங்கிராஸ் பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கான சாத்திய கூறுகள் உள்ளனவா என்பதனை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின் போது, மாவட்ட வன அலுவலர் (நீலகிரி) சச்சின் போஸ்லே துக்காராம், முதன்மை தலைமைப் பொறியாளர் விஸ்வநாதன், தலைமைப்பொறியாளர் இளஞ்செழியன், கண்காணிப்பு பொறியாளர் சத்தியவாகீஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகரி, கல்லூரி உதவி முதல்வர் மரு.குமுதா, உதகை வருவாய் கோட்டாட்சியர் துரைசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தவமணி, உதவி செயற்பொறியாளர் கோவிந்தராஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பட்பயர் பகுதியில் மினி டைடல் பார்க் அமைக்க நகராட்சி நிலம் வழங்கும் தீர்மானம் ரத்து

## ஊட்டி நகர்மன்ற கூட்டத்தில் முடிவு



**ஊட்டி, அக்.01-**

பட்பயர் பகுதியில் மினி டைடல் பார்க் அமைக்க நகராட்சி நிலம் வழங்கும் தீர்மானம் ரத்து செய்து ஊட்டி நகர்மன்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஊட்டி நகராட்சியின் மாதாந்திர கூட்டம் தலைவர் எம்.வாணீஸ்வரி தலைமையில் நேற்று நடந்தது. ஆணையாளர் காந்திராஜ், துணை தலைவர் ரவிக்குமார், பொறியாளர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டம் தொடங்கியதும் கவுன்சிலர்கள் தங்கள் வார்டு பணிகள் குறித்து விவாதித்தனர். கவுன்சிலர்

ஜார்ஜ் பேசும்போது, டெண்டர் பாஸ் ஆனாலும் வேலைக்கு அனுமதி வழங்குவதில்லை. மக்கள் வரிப்பணத்தில் நகராட்சி இயங்குகிறது. ஆனால் மக்களுக்கு எதுவும் நடப்பதில்லை என்றார்.

தொடர்ந்து கவுன்சிலர்கள் ஜார்ஜ், கீதா, நாகமணி, நாகராஜ் ஆகியோர் ஊட்டி நகராட்சியில் உள்ளூர் திட்டக்குழு மீண்டும் அமைக்க வேண்டும். தமிழகத்தில் ஊட்டி நகராட்சியில் மட்டும் கட்டிட அனுமதி வழங்கும் அதிகாரம் இல்லை. இது உள்ளாட்சி அதிகாரத்தை பறிக்கும் செயல். இதனால், மீண்டும் உள்ளூர் திட்டக்குழு ஏற்படுத்த அவசர தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

துணை தலைவர் ஜே.ரவிகுமார், ‘உதகை நகராட்சியில் 2016-ம் ஆண்டு வரை உள்ளூர் திட்டக்குழு செயல்பட்டு வந்தது. கட்டிட அனுமதி இந்த குழுவினரே வழங்கி வந்தனர். 1996-ம் ஆண்டு நகராட்சியே 1500 சதுர அடி பரப்பரவிலான கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கலாம் என இருந்தது. இந்நிலையில், கடந்த 4 ஆண்டுகளாக நீலகிரி மாவட்ட கலெக்டர்; தான் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என மாற்றியமைக்கப்பட்டது. மாவட்ட கலெக்டரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்ட பிளான்கள் நகராட்சி கூட்டத்தில் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்க வேண்டும். குன்னூர், கூடலூர் மற்றும் நெல்லியாளம் நகராட்சிகளில் இந்த நடைமுறை உள்ளது. இது குறித்து அனைத்து கவுன்சிலர்களும் மாவட்ட கலெக்டரை சந்தித்து முறையிடலாம்.உதகை நகராட்சியின் மாஸ்டர் பிளான் சட்டம் அமல்படுத்துவதற்கு முன்பே நகராட்சியில் உள்ள நிலங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏழை மக்கள் வீடு கட்ட 3 துறைகளின் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. நகராட்சியின் அனுமதி போதுமானது. இதனால், மாஸ்டர் பிளான் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். இதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்’ என்றார்.

கவுன்சிலர்கள் முஸ்தபா, அபுதாஹீர் ஆகியோர், உதகை நகராட்சி மார்க்கெட்டில் திருட்டு சம்பவம் நடந்தது. இதற்கு காரணமாக பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ளது தான். ஒரே ஒரு காவலாளி மட்டுமே உள்ளார். மார்க்கெட்டின் கேட்டுகள் உடைந்துள்ளன. விளக்கு இல்லாமல் இருந்தன. திருட்டு சம்பவத்துக்கு பின்னர் விளக்குகள் பொறுத்தப்பட்டுள்ளன. காவலாளிகளை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், உதகை நகராட்சிக்கு சுற்றுலா மூலம் எவ்வித வருவாயும் கிடைப்பதில்லை. நகராட்சி வசமிருந்த சிறுவர் பூங்கா, பேருந்து நிலையம் ஆகியவை கைவிட்டு போயுள்ளன. இந்நிலையில், பட்பயர் பகுதியில் 5 ஏக்கர் நிலம் மினி டைடல் பார்க் அமைக்க நகராட்சி நிலம் வழங்கும் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என கவுன்சிலர்கள் முஸ்தபா, குமார், நாகமணி ஆகியோர் வலியுறுத்தியதால், அந்த தீர்மானம் ரத்து செய்யப்படுவதாக ஆணையாளர் எம்.காந்திராஜ் தெரிவித்தார்.

கவுன்சிலர் ரஜினிகாந்த் பேசும்போது- எனது வார்டு அலங்கார் தியேட்டர் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாயை சீரமைக்க வேண்டும். நகரப்பகுதியில் உள்ள கழிப்பறைகளை பராமரிக்கும் உரிமையை டெண்டர் முறையில் ஒப்படைக்க வேண்டும். கவுன்சிலர் நாதன் பேசும்போது நகராட்சிக்குட்;பட்ட பகுதியில் தூய்மைப்பணிக்கான மேஸ்திரிகளை நியமிக்க வேண்டும் என்றார். மேலும் நகராட்சியில் பணிகளை மேற்கொள்ள கடற்பாறை, கம்பி, வெட்டுக்கத்தி போன்ற உபகரணங்கள் இல்லாமல் உள்ளது மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது என பெரும்பாலான கவுன்சிலர்கள் தெரிவித்தனர். இவ்வாறாக கவுன்சிலர்கள் தங்களது வார்டு பிரச்சனைகள் குறித்து பேசினர்.

# ஊட்டியில் மழையினால் சேதமடைந்த சாலைகள் மற்றும் நிலச்சரிவு பகுதிகள்: அமைச்சர்கள் எ.வ.வேலு, கா ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டனர்

**ஊட்டி, அக்.01-**

நீலகிரி மாவட்டம் உதகையில் மழையினால் சேதமடைந்த சாலைகள் மற்றும் நிலச்சரிவு பகுதிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வனத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது ஊட்டி உதகை நகராட்சிக்குட்பட்ட கோடப்பமந்து பகுதியில் நிலச்சரிவினை தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மண் ஆணி பொருத்தப்பட்டுள்ள பகுதியினையும், குட்ஷெப்பர்டு பள்ளி அருகில் சாலையில் ஏற்பட்டுள்ள விரிசல்களையும், உதகை அவலாஞ்சி செல்லும் கல்லக்




கொரை பகுதியில் 80 மீட்டர் நீளமும் 10 அடி உயரத்திற்கு ஏற்பட்ட மண்சரிவினை தற்காலிகமாக சீர் செய்து போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதையும்;, இத்தலார் பகுதியில் சாலையில் ஏற்பட்டுள்ள விரிசலையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.மேலும், கனமழையின் காரணமாக உதகை லாரன்ஸ் பகுதியில் விவசாய நிலத்தில் ஏற்பட்டுள்ள மண் சரிவினையும், காந்தி நகர் பகுதியில் தார் சாலையில் ஏற்பட்டுள்ள விரிசல் தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளதையும்; நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்;. முன்னதாகஅவலாஞ்சிப் பகுதியில் மரக்கன்றுகளை நடவு செய்தனர்.அதனை தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் யானை வழிப்பாதை அமைக்கப்பட்டதையும், மரப்பாலம் அருகில் மண் தன்மைகள் ஆய்வுகளின் அடிப்படையில் புவியீர்ப்பு கேபியன் தடுப்பு சுவருடன் நங்கூர ஆணியுடன் மண் சரிவில் தண்ணீர் உட்புகாத முறையில் தாவரங்களை கொண்டு மண் சரிவை தடுக்கும் கட்டுமான பணிகள் முடிவுற்றதையும் பார்வையிட்டார். பின் னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-நீலகிரி மாவட்டத்தில் துறைகளின் சார்பில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டோம். நீலகிரி மாவட்டத்தில் மூன்று மாத காலம் தொடர்ந்து இதுவரை இல்லாத அளவில் 3,530 மி.மீ மழை பெய்துள்ளது. இந்த தொடர் மழையின் காரணமாக 81 இடங்களில் நிலச்சரிவும், 91 இடங்களில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து தடைப்பட்டது. ஆனால் பல்வேறு துறைகளின் சார்பில் போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பாதிப்புகள் ஏற்படாத வகையில் அனைத்தும் சீர் செய்யப்பட்டது. ஊட்டி - அவலாஞ்சி செல்கின்ற வழியில் கல்லக்கொரை என்ற இடத்தில் 80 மீட்டர் நீளமும் 10 அடி உயரத்திற்கு முழுமையாக மண் சரிந்து விட்டது. நெடுஞ்சாலைத்துறை சார்பில் தற்காலிகமாக இதை சரி செய்து போக்குவரத்திற்கு வழி செய்யப்பட்டுள்ளது. நிரந்தரமாக தீர்வு காண நானும், மாவட்ட அமைச்சரும், துறையின் உயர் அதிகாரிகளும் நேரில் ஆய்வு செய்துள்ளோம். இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிரந்தரமாக தீர்வு காணும் வகையில் டிபிஆர் தயார் செய்து அதற்கான நடவடிக்கை மேற் கொள் ளப் ப டும். மேலும், சென்ற ஆண்டு 21.12.2021 அன்று மலைப்பகுதிகளில் மண்சரிவினை தடுப்பு எப்படி என்பது குறித்து, பைலட் புரோகிராம் என்ற ஒரு திட்டத்தின் மூலம் கோடப்பமந்து மற்றும் மரப்பாலம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் அந்தப்பகுதியில் ஒரு பைலட் புரோகிராம் மூலம் மண்சரிவினை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு இடத்திலும் மண் சரிவு ஏற்படவில்லை. இது ஒரு பரிட்சாத்தமான பணியாக துவக்கப்பட்டது . நேற்றைய தினம் கோட்ட பொறியாளர்; இது போன்று மாவட்டம் முழுவதும் 53 இடங்களில் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார்கள். இதனை ஆய்வு மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன். ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை வழங்;கிய பின்னர், நிரந்தரமாக மண்சரிவினை தடுப்பதற்கான வழிமுறையினை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று மண் சரிவினை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார். இவ் ஆய்வின் போது, தலைமைப் பொறியாளர்கள்; பாலமுருகன் (தேசிய நெடுஞ்சாலை), சந்திரசேகரன் (நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பாராமரிப்பு), கண்காணிப்பு பொறியாளர்கள் சரவணன், .கண்ணன், கோட்டப்பொறியாளர்கள் குழந்தைராஜ், (நெடுஞ்சாலை), செல்வம்(தேசிய நெடுஞ்சாலை) மனுநீதி (தரக் கட்டுப்பாடு), முன்னாள் அரசு கொரடா பா.மு.முபாரக், மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, உதகை வருவாய் கோட்டாட்சியர் துரைசாமி மற்றும் உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் உட்பட பலர்; உடனிருந்தனர்.

## பயிர் காப்பீடு செய்ய நீலகிரி விவசாயிகளுக்கு அழைப்பு

**ஊட்டி, அக்.01-**

பயிர் காப்பீடு செய்ய நீலகிரி விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

புதுப்பிக்கப்பட்ட பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா திட்டம் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி எச்டி எப்சி இஆர்ஜிஓ காப்பீடு நிறுவனம் மூலம் 2022-2023-ம் ஆண்டு ராபி பருவத்திற்கு செயல்படுத்தப்பட உள்ளது.இத் திட்டத்தில் வங்கி மூலம் பயிர் கடன் பெறும் விவசாயிகள், பயிர் கடன் பெறாத விவசாயிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட குத்தகை நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகள் என அனைவரும் பயன் பெறலாம்.நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, வாழை, முட்டைகோஸ், கேரட், பூண்டு மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செயலாம். பீரிமியம் தொகையாக ஒரு ஏக்கருக்கு உருளைக்கிழங்கு ரூ.5135.14-, வாழை ரூ. 4564.56-, முட்டைகோஸ் ரூ.3892.72-, கேரட் ரூ.3813.68- பூண்டு ரூ.5196.88- மற்றும் இஞ்சி ரூ. 4759.70- செலுத்த வேண்டும்.பயிர் கடன் பெறும் விவசாயிகளுக்கு அந்தந்த கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் காப்பீடு தொகை பிடித்தம் செய்யப்படும். கடன் பெறாத விவசாயிகள் தங்களின் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் உள்ள வங்கி கணக்கிலும் ர்னுகுஊ நுசுபுழ காப்பீடு நிறுவனத்திலும் பயிர் காப்பீடு தொகையை செலுத்தலாம். இத் திட்டம் தொடர்பான மேலும் விபரங்களை தெரிந்துக் கொள்ள தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், தோட்டக்கலை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பயிர் காப்பீடு செய்ய கடைநி நாள் : முட்டைக்கோஸ்க்கு 31.01.2023, உருளைக்கிழங்கு, பூண்டுக்கு 15.02.2023 மற்றும் வாழை, கேரட், இஞ்சி 28.02.2023க்கு. எனவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள உருளைக் கிழங்கு, வாழை, முட்டைகோஸ், கேரட் , பூண்டு மற்றும் இஞ்சி சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் தங்களின் பயிர்களை பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

